14-9-2025 Nagercoil www.dinakaran.com

தினகரன்

DINAKARAN No.1 நாளிதழ்

## மார்த்தாண்டம்

# நேசமணி கல்லூரியில் பட்டமளிப்பு விழா




▶ மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது.

**மார்த்தாண்டம், செப். 14:** மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி பட்டமளிப்பு விழா நடந்தது. மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் 2023 - 24 ம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது . தாளாளர் டாக்டர் பிரவீன் தலைமை வகித்தார். முதல்வர் டாக்டர் பிஜு முன்னிலை வகித்தார். சிபிஐ முன்னாள் இணை டைரக்டர் ரிஷிராஜ் சிங் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டங்கள் வழங்கினார்.

பல்கலைக்கழக அளவில் 10 மாணவ மாணவிகள் முதல் இடத்தை பிடித்தனர். அவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்ற 86 மாணவ மாணவிகள் உட்பட 950 மாணவ மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது. கல்லூரி நிர்வாக உறுப்பினர்கள் வக்கீல் அஜித்குமார், ஜெயசிங், செல்வகுமார், கிங்ஸ்லி தோமஸ், சுனில் குமார், டாக்டர் எட்வர்ட் ஜெயசிங் உட்பட கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி விழா கன்வீனர் பேராசிரியர் டாக்டர் ஜெபமெல்வின் தலைமையில் செய்யப்பட்டிருந்தது.